## நான் பொலிசாரை அழைத்தால், என்ன நடக்கும்?

சம்பவ இடத்திற்கு வழமையாக பொலிசார் இருவராகச் செல்வார்கள். நிலைமை குறித்து சம்பந்தப்பட்ட நபர்களிடம் தனித்தனியாக விசாரிக்கப்படும். தொலைபேசியில் அழைத்த நபரிடம், வழமையாக எதுவும் கேட்கப்படுவதில்லை. வன்முறையால் பாதிக்கப்பட்ட நபரைப் பாதுகாக்க என்ன மேலதிக நடவடிக்கைகள் தேவை என்பதை பொலிசார் தீர்மானித்துக்கொள்வார்கள். அவர்களுக்குப் பின்வரும் சந்தர்ப்பங்கள் உள்ளன[1]:

- காயமடைந்திருந்தால் அவர்கள் மருத்துவ உதவியை ஒழுங்குசெய்வார்கள்.

- வெளியேற்றுதல் மற்றும் விலக்கி வைத்தல்: பொலிசார் வன்முறையில் ஈடுபட்ட நபரை அவர் ஒன்றுசேர்ந்து வாழும் வீட்டுக்குத் திரும்புவதைத் தடைசெய்யலாம். வெளியேற்றுதல் ஆகக்கூடியது 20 நாட்களுக்கு செல்லபடியாகும்.

  பொலிசார், குற்றமிழைத்த நபரை சம்பந்தப்பட்ட நபர்களின் (பாதிக்கப்பட்டவர், பிள்ளைகள்) வதிவிடத்திற்கு, வேலையிடத்திற்கு அல்லது பாடசாலைக்கு அண்மையாக செல்வதற்கோ மற்றும் தொடர்பு கொள்வதற்கோ தடைவிதிக்கலாம்.

  வன்முறையால் பாதிக்கப்பட்ட நபர் பாதுகாப்பு நடவடிக்கைகளை நீடிக்குமாறு நீதிமன்றத்தைக் கோரலாம். இதை எவ்வாறு மேற்கொள்வது என்பதை பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி-ஆலோசனை மையம் (Opferhilfe-Beratungsstelle) அறியத்தரும்.

- தடுத்துவைத்தல்: வன்முறையில் ஈடுபடும் நபரை பொலிசார் 24 மணித்தியாலங்கள் தடுத்து வைக்கலாம். உதாரணமாக, வீட்டிலிருந்து வெளியேற மறுப்புத் தெரிவித்தால். அல்லது அவர் வேறு நபர்களுக்கு உடனடியான ஆபத்தாக இருந்தால்.

- பாதுகாப்புத் தங்குமிடங்கள்: பொலிசார், வன்முறையால் பாதிக்கப்பட்ட நபரைத் தனியாகவோ அல்லது பிள்ளைகளுடனோ ஒரு பாதுகாப்புத் தங்குமிடத்துக்கு அழைத்துச் செல்லலாம்.

## நான் ஒரு ஆலோசனை நிலையத்தை தொலைபேசியில் அழைத்தால், என்ன நடக்கும்?

- நீங்கள் விரும்பினால், உங்கள் தேவைகள் அல்லது அவதானிப்புகளை அடையாளம் தெரியாமல் விபரிக்கலாம்.
- ஆலோசனை நிலையத்தின் ஆலோசனையாளர்கள் இரகசியக் காப்புக்கு உட்பட்டவர்கள். அதாவது அவர்கள் எவருக்கும் இக் கலந்துரையாடல் குறித்துத் தெரிவிக்க முடியாது.
- தொலைபேசி உரையாடலின் பின்பு எவரும் விரும்பாவிட்டால், எவ்வித மேலதிக நடவடிக்கைகளும் எடுக்கப்பட மாட்டாது.
- தேவைப்படுமாக இருந்தால், ஆலோசனை நிலையம் உங்களை வேறு ஆலோசனை நிலையத்துக்கு தொடர்புபடுத்திவிடும்.

[1] «Informationen über Häusliche Gewalt, Unterstützung und Massnahmen» (வீட்டு வன்முறை, உதவி மற்றும் நடவடிக்கைகள்) BIG, 2021